செ.வெ.எண் 644 நாள் 8-10-2007

# பத்திரிக்கை செய்தி

08.10.2007 அன்று தமிழ் நாடு மின்சார வாரியம் (handwritten correction: துறை) அமைச்சர் மாண்புமிகு ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் முன்னிலையில் பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனமும் , என்.டி.பி.சி, தமிழ் நாடு எனர்ஜி கம்பெனி லிட் நிறுவனமும் வள்ளூர் அனல் மின் நிலையத்திற்கான (வடசென்னை) 2x500 மெகா வாட் அளவில் மின் உற்பத்தி இயந்திரங்களை உற்பத்தி செய்து நிறுவுவதற்கான ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் திரு. எம்.ஆர்.கணேசன் நிர்வாக இயக்குநர், வர்த்தகம் அவர்கள் BHEL சார்பாகவும், திரு. எஸ்.கிருஷ்ணமூர்த்தி CEO, அவர்கள் (NTECL) சார்பாகவும் கையெழுத்திட்டனர். திரு. ஆர். சத்பதி, இ.ஆ.ப, முதன்மை செயலர், எரிசக்தி துறை, மின்சார வாரியத் தலைவர் மற்றும் இயக்குநர் NTECL, திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப. மற்றும் த.நா.மி.வாரிய உறுப்பினர்களும், BHEL–ன் இயக்குநர் திரு. கே.ரவிகுமார், மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. ஈ. மீனாட்சி சுந்தரம் அவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்த உபகரணங்களின் ஒப்பந்த விலை ரூ.1992 கோடியாகும். பெல் நிறுவனம் மேற்படி இயந்திரங்களை தயாரித்து நிறுவிய பின் தனது முதல் 500 மெகாவாட் யூனிட் மின் உற்பத்தியைத் தொடங்கும். இதற்கு சுமார் 38 மாதங்கள் ஆகும். மேலும் இரண்டாவது யூனிட் சுமார் 43 மாதங்களில் தனது மின் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9